ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,721 — 1959 අප්‍රේල් 9 වැනි බ්‍රහස්පතින්ද — 9.4.1959

11,721 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## பதவி வெற்றிடம்

### இரண்டு ஆயுள்வேத வைத்தியர் பதவிகள், தரம் I, உள்ளூராட்சிச் சேவை

உள்ளூராட்சிச் சேவையில் இரண்டு I ந் தர ஆயுள்வேத வைத்தியர் பதவிகளுக்கு உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்களில் ஒருவர் முதலில் கண்டி மாநகர சங்கத்திலும் மற்றவர் யாழ்ப்பாணம் மாநகர சங்கத்திலும் நியமிக்கப்படுவர்.

2. **சம்பளம்** : வருடமொன்றுக்கு ரூ. 1,620—19 × 120 ம், 1 × 180—ரூ.4, 080 ம் வருடச் சம்பளம் ரூ. 2,820 ஆவதற்குமுன் திறமைத் தடைப் பரீட்சையுண்டு.

3. **தேவையான தகைமைகள்**—

(அ) விண்ணப்பக்காரர், 1949 ம் ஆண்டின் 49 ம் இலக்க சுதேச வைத்திய திருத்தச் சட்டத்தின் 2 ம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(ஆ) விண்ணப்பக்காரர், இலங்கை சுதேச வைத்தியக் கல்லூரியின் சுதேச வைத்திய, சத்திர வைத்திய டிப்ளோமாவேனும் அல்லது இந்தியாவில் அல்லது இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற ஒரு ஆயுள்வேதக் கல்லூரியின் இதற்குச் சமமான அல்லது கூடுதலான தகைமைகளேனும் பெற்றவராயும் டிப்ளோமா பெற்ற பின்னர் பொது ஆயுள்வேத வைத்தியத் தொழிலில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடையவராயும் இருத்தல் வேண்டும். 1953 ம் ஆண்டு செப்ரெம்பரிலிருந்து இறுதிப்பரீட்சையில் சித்தியெய்திய சுதேச வைத்திய, சத்திர வைத்திய (இலங்கை) டிப்ளோமா பட்டதாரிகளில் புதிய திட்டப்படியான பயிற்சியைப் பெற்றுள்ளவர்கள், டிப்ளோமா பெற்ற பின்னர் வைத்திய அனுபவமெதுவும் பெற்றிருத்தலிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர்.

(இ) மேற்கூறிய தகைமைகள் இல்லாத அங்கீகாரம் பெற்ற பொது ஆயுள்வேத வைத்தியர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால், அவர்கள் பொது ஆயுள்வேத வைத்தியத் தொழிலில் 15 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடையவர்களாயும் பிரசித்திபெற்ற ஒரு குரு வைத்தியரிடம் ஐந்து வருடங்களுக்காவது சிட்சை பெற்ற பின்னர் பிரபல்யமாக தொழில் நடத்துபவர்களாயும் இருத்தல் வேண்டும். இத்தகைய விண்ணப்பக்காரர் அதற்கு அத்தாட்சியாக அப்பிரிவின் பிரிவுக் காரியாதிகாரியிடமும் குரு வைத்தியரிடமும் பெற்ற அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையின் II ந் தர ஆயுள்வேத வைத்தியர்களாக இருப்பவர்களுள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் மாட்டு பிரீதி காட்டப்படும்.

4. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் சொந்தத்தில் தொழில் நடத்தாது தடுக்கப்படுவர். அவர்கள் ஆயுள்வேத மருந்துச்சாலைகளுக்கு அண்மையில் வசிக்குமாறு வேண்டப்படுவர்.

5. விண்ணப்பக்காரர் கீழ்க்காண்பவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளையல்ல) அவர்களின் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவு அத்தாட்சிப் பத்திரம் (ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரமேனும் உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் பொருட்டு வழங்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரமேனும் அல்லது சத்தியக்கடுதாசியேனும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ஆ) ஆயுள்வேத வைத்தியத் தொழிலில் அனுபவமுண்டென்பதற்கு அத்தாட்சியாக, தொழில் நடத்திய கால அளவைக் குறிப்பிட்டு, அப்பிரிவின் பிரிவுக் காரியாதிகாரி வழங்கிய அத்தாட்சிப் பத்திரம்.

6. இந்த அரசாங்க வர்த்தமானியின் 4 ம் பாகத்தின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளுக்கு நியமனங்கள் செய்வது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்.

7. நியமனங்கள் செய்வது சம்பந்தமான பொது நிபந்தனைகளின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில், விண்ணப்பங்கள், 1959 ம் ஆண்டு எப்ரல் மாதம் 23 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கவேண்டும். குறித்த பத்திரத்தில் அந்தந்த அம்சங்களுக்குப் பதிலாக பின்வருவனவற்றை வைத்தல் வேண்டும் :—

" 9 (இ) தற்போதைய உத்தியோகம்—

(1) இப்பொழுது வகிக்கும் உத்தியோக பதவியின் பெயரும் தரமும் அதில் நியமனம்பெற்ற திகதியும் : ————.

(2) இப்போதைய சம்பளமும் சம்பள விகிதமும் : ————.

(3) உள்ளூராட்சிச் சபைகளில் ஏதும் உத்தியோகம் பார்த்திருப்பின் அதுபற்றிய குறிப்புகள் : ————.

11 (அ) ஆயுள்வேதத்தில் தகைமைகள் (பெற்ற தராதரப் பத்திரங்களின் பிரதிகளுடன்) : ————.

(ஆ) மேற்படி தகைமைகளை வழங்கிய ஆயுள்வேதக் கல்லூரி : ————.

(இ) அத்தகைமைகளைப் பெற்ற திகதி : ————.

(ஈ) 1949 ம் ஆண்டின் 49 ம் இலக்க சுதேச வைத்திய திருத்தச் சட்டத்தின் 2 ம் பிரிவின்படியான " பொது இடாப்பில் " அல்லது " விசேஷ இடாப்பில் " உள்ள பதிவு எண் :————.

12 (1) தகைமைகள் பெற்ற பின்னர் பொது ஆயுள்வேத வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு உழைக்கத் தொடங்கிய திகதி, அதற்குச் சான்றான அத்தாட்சிப் பத்திரங்களுடன் :————.

(2) ஆயுள்வேத வைத்தியத்தின் எப்பிரிவிலேனும் விசேஷ திறமையுண்டா ? உண்டெனில் விபரம் தருக :————."

8. எல்லா விண்ணப்பங்களும் கிடைத்தமை அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை அறிவிக்கப்பெறாத விண்ணப்பக்காரர் எவரும் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத் தவறினால் விண்ணப்பக்காரரின் கோரிக்கை எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

ஈ. எவ். டயஸ் அபயசிங்க,
தலைவர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை.

தபால் பெட்டி 530,
கொழும்பு, 1959 ம் ஆ எப்ரில் மீ 6 ந் உ.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதனை முன்னிட்டு, 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 17 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 13 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஞூ பங்குனி (மார்ச்) மீ 26 ந் உ.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது